**இரண்டாவது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், நாகர்கோவில்.**

**O.S. No.196/2011**

**Date :27.02.2026**

**வா.சா. 2 ஜான் கென்னடி**

**Solemnly affirmed in accordance with the Provision of Act X of 1873.**

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை.**

மதுரை S. S. Colony யில் கடந்த 25 வருடங்களாக தாமசித்து வருகிறேன் என்றால் சரிதான். என்ன பணி செய்து வருகிறேன் என்றால் வேலை செய்து ஓய்வு பெற்று தற்போது Marketing தொழில் செய்து வருகிறேன். வாதி முத்தம்மாளுக்கு ஒரே மகள் என்றால் சரியல்ல. ஒரு மகன், 2 மகள்கள். எனது சகோதரர் வாதியின் மகளை திருமணம் செய்துள்ளார் எந்த வருடம் என்றால் 1992 ல். எனது சகோதரரின் தற்போது வயது என்ன என்றால் 63. வாதியின் மகளை எனது சகோதரர் திருமணம் செய்து கொண்டதால் தான் வாதி எனக்கு உறவினர் ஆனார் என்றால் சரிதான். வாதியின் மகளும் அவரை திருமணம் செய்து கொண்ட எனது சகோதராரோ இவ்வழக்கில் சாட்சியம் அளிக்க வரவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. இவ்வழக்கின் அனைத்து விவரங்களும் தெரியும் என்று கூறி பிரமாண வாக்கு மூலம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். மேற்படி கூறியவாறு அனைத்து விவரங்களும் தெரிந்து கொண்டு நான் மேற்படி வாதியின் மகளும் அவரை திருமணம் செய்து கொண்ட எனது சகோதராரோ இவ்வழக்கில் சாட்சியம் அளிக்க வரவில்லை என்ற விவரம் தெரியாது என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

நான் இவ்வழக்கில் 3 விதமான பொது அதிகார பத்திரம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். நான் இவ்வழக்கில் மனு எண் 12 தாக்கல் செய்து எனது அதிகார

ஆவணத்தை அனுமதிக்க கோரி கேட்டேன் என்றால் சரிதான். மேற்படி மனுவில் நான் வாதிக்கு தூரத்து உறவினர் என்று கூறி மனு தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரியல்ல. மேற்படி மனுவில் பிறப்பித்த உத்தரவில் மனுதாரர் வாதிக்கு தூரத்து உறவினர் என்றால் காரணத்தினால் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. பதிவு செய்யப்படாத பொது அதிகாரம் ஆவணம் என்ற காரணத்தினால் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

மேற்படி பொது அதிகார ஆவணத்தின் மூலம் இவ்வழக்கின் கட்சியாக சேர்க்கப்படுவதற்கோ அல்லது சாட்சியாக வருவதற்கோ எவ்வித அதிகாரம் இல்லை என்றால் சரியல்ல. மேற்படி தள்ளுபடி செய்யப்பட்ட பொது அதிகார ஆவணம் குறித்து மாண்புமிகு உயர் நீதிமன்றத்தில் உத்தரவு பிறப்பித்த பின்பு வாதி நீதிமன்றத்தில் சாட்சியம் அளித்துள்ளார் என்றால் சரியல்ல. 17.11.2018 தேதியிட்ட பொது அதிகார ஆவணத்தின்படி எனக்கு இவ்வழக்க சொத்தினை விற்பதற்கோ எடுத்துக்கொள்வதற்கோ உரிய சரத்துகள் இருந்ததா என்றால் இல்லை.

மாடத்தி என்பவர்க்கு பட்டிகைச் சொத்து ஆதியில் உரிமைப்பட்டதாக பிராமாண வாக்கு மூலத்தில் கூறக்கூடிய கிரய ஆவணத்தை படித்து பார்க்கவில்லை என்றால் சரிதான். ஆகையால் மேற்படி சொத்து குறித்த சர்வே எண்எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. மேற்படி சொத்தினை குறித்து ஒரு ஈடாதாரம் 12.09.1968 ல் ஏற்படுத்தப்பட்டது குறித்த விவரம் தெரியுமா என்றால் தெரியாது. இவ்வழக்கின் வாதுரை மற்றும் எதிர் வாதுரை படித்து பார்த்தேனா என்றால் படித்து பார்க்கவில்லை.

வாசாஆ 8 வில்லங்க சான்றிதழ் எந்த ஆண்டு எடுக்கப்பட்டது என்றால் 2003 ல் இருந்து 2023 என நினைக்கிறேன் சரியாக தெரியவில்லை. வாசாஆ 8 எந்த தேதியில் எடுக்கப்பட்டது என்றால் 2023. தேதி நியாபகம் இல்லை. வாதியின் பெயரில் கிரயம்

ஏற்படுத்தப்பட்ட போது பார்க்கப்பட்ட வில்லங்கம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்திருப்பார்கள். 2023 ல் எடுக்கப்பட்ட வில்லங்க சான்றிதழை தவிர வேறு வில்லங்க சான்றிதழ்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. வாசாஆ 7 எந்த தேதியில் மனு செய்து வாங்கப்பட்டது என்றால் 2023. தேதி நியாபகம் இல்லை. வாசாஆ 7 இவ்வழக்கில் தாக்கல் செய்ய வேண்டி ஏற்படுத்தப்பட்டது என்றால் சரியல்ல.

வாசாஆ 7 ல் முதல் பெயராக இருக்கக்கூடியது சுடலைமுத்து மூப்பனார் மகன் அருணாச்சல மூப்பனார் என்றுள்ளது என்றால் சரிதான். வேறு சில நபர்கள் பெயரும் உள்ளது. வாசாஆ 7 இரண்டாவதாக சுப்பையா மூப்பனார் மகன் ராஜப்பன் என்றுள்ளது அவர் இந்த வழக்கின் பிரதிவாதி என்றால் பெயர் உள்ளது பிரதிவாதியா என்று தெரியாது. வாசாஆ 7 ல் எந்த இடத்திலாவது ராமலெட்சுமி என்று குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை.

பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட சொத்தினை அபகரிக்க வேண்டி வாதியை பயன்படுத்தி அவர் பெயரில் போலியான கிரய பத்திரம் ஏற்படுத்தி நான் இவ்வழக்கு பட்டிகை சொத்து குறித்து தனிப்பட்ட ஆதாயம் தேட முயற்சிக்கிறேன் என்றால் சரியல்ல. அவ்வாறான சுய ஆதாயத்திற்காக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வாதிக்கு உரிமை பட்ட சொத்தில் எந்த வில்லங்கமும் இதுவரையில் இல்லை என்று நான் பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ளது பொய் என்றால் சரியல்ல.

நான் இவ்வழக்கின் மூன்று விதமான பொது அதிகார ஆவணம் தாக்கல் செய்து இவ்வழக்கில் பொய்யாக சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரியல்ல.

<u>குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது.</u>